**மே – 05**

# TNPSC துளிகள்

- மேகாலயாவில் உள்ள மவ்லிங்குங் (ஷில்லாங்கிற்கு அருகில்) முதல் அசாமில் உள்ள பஞ்ச்கிராம் (சில்சார் அருகே) வரையிலான NH-06 தேசிய நெடுஞ்சாலையில் பசுந்தட அணுகல் கட்டுப்பாட்டில் உள்ள 166.80 கிலோ மீட்டர் நீளத்திலான நான்கு வழியின் வருடாந்திரக் கலப்பு தவணை முறையில் (hybrid annuity model) மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வகிப்பதற்கான ஒரு முன்மொழிவினை மத்திய அரசானது அங்கீகரித்துள்ளது.
- விளையாட்டுத் துறையின் முன்னாள் செயலாளர் திருமதி சுஜாதா சதுர்வேதி, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- போடோஃபா உபேந்திர நாத் பிரம்மாவின் சிலையானது புது டெல்லியில் திறக்கப் பட்டுள்ளது மற்றும் டெல்லியின் கைலாஷ் காலனியில் உள்ள ஒரு சாலை போடோஃபா தலைவரின் நினைவாக 'போடோபா உபேந்திர நாத் பிரம்ம மார்க்கம்' என அதிகாரப் பூர்வமாக மறுபெயரிடப் பட்டுள்ளது.
- ஒலிம்பிக்கில் பட்டம் பெற்ற சாத்விக்சாய்ராஜ் ரங்கிரெட்டி மற்றும் சிராக் ஷெட்டி ஆகியோர் மத்திய இளையோர் நலன் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரிடமிருந்து மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா விருதைப் பெற்றனர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## நம்மாழ்வார் விருதுகள் 2025




- கோவை, திருப்பூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களைச் சேர்ந்த தலா ஒருவர் என மூன்று விவசாயிகள் இயற்கை வேளாண்மையில் சிறந்து விளங்கியதற்காக தமிழக அரசின் இந்த ஆண்டிற்கான நம்மாழ்வார் விருதைப் பெற்றுள்ளனர்.
- கோவை மாவட்டத்தைச் சேர்ந்த G. சம்பத்குமார் முதல் பரிசைப் பெற்றார்.
- திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த D. ஜெகதீஷ் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த V. காளிதாஸ் இதில் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது பரிசுகளைப் பெற்றனர்.

- இயற்கை வேளாண்மை முறையை நன்கு கடைப்பிடித்து ஊக்குவிக்கும் மற்றும் சக இயற்கை விவசாயிகளை ஆதரிக்கும் விவசாயிகளை அரசின் நம்மாழ்வார் விருது ஊக்குவித்து கௌரவிக்கிறது.

# தேசியச் செய்திகள்

## 11 வெப்ப அலை பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்கள் - NHRC வழிகாட்டுதல்கள்




- தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) ஆனது, பாதிக்கப்படக் கூடிய மக்களை, குறிப்பாக ஏழை சமூகங்களைச் சேர்ந்த மக்களைப் பாதுகாப்பதற்கான சில உடனடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு 11 மாநிலங்களிடம் வலியுறுத்தி உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையில் வெப்பம் மற்றும் வெயிலின் வெப்பத் தாக்கத்தினால் சுமார் 3,798 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) தெரிவித்துள்ளது.
- பஞ்சாப், ஹரியானா, உத்தரப் பிரதேசம், பீகார், ஜார்க்கண்ட், மேற்கு வங்காளம், ஒடிசா, ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, மகாராஷ்டிரா மற்றும் இராஜஸ்தான் ஆகியன இந்த 11 மாநிலங்கள் ஆகும்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையம் ஆனது, தங்குமிடங்கள் மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்குதல், வேலை நேரங்களில் பெரும் மாற்றங்கள் மற்றும் வெப்பம் தொடர்பான நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கான பல்வேறு தரப்படுத்தப் பட்ட நடைமுறைகளை கோரியது.

## நடுவண் மன்றத் தீர்ப்புகளை மாற்றியமைப்பதற்கு வேண்டி வரையறுக்கப்பட்ட அதிகாரம்

- மேல்முறையீட்டு நீதிமன்றங்கள் ஆனது, நடுவர் மன்ற தீர்ப்புகள், 1996 ஆம் ஆண்டு நடுவண் மற்றும் இசைவுச் சட்டத்தின் கீழான அதிகாரங்களைப் பயன்படுத்தி, நடுவர் மன்றத் தீர்ப்புகளை மாற்றியமைக்க முடியும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்து உள்ளது.
- இந்த நீதிமன்றங்கள் ஆனது, சட்டத்தின் 34 மற்றும் 37வது பிரிவுகளின் கீழ் நடுவண் தீர்ப்புகளை மாற்றியமைப்பதற்கு என "வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை" கொண்டு உள்ளன.
- அந்த நீதிமன்றத்தினால் செய்யப்பட்ட மாற்றங்கள் ஆனது, ஒரு தீர்ப்பின் படியான செல்லுபடியாகாத பகுதியை அதன் செல்லுபடியாகும் பகுதியிலிருந்து துண்டிக்கவோ அல்லது தீர்ப்பில் உள்ள வெளிப்படையான தட்டச்சு சார், கணக்கீட்டு சார், எழுத்துப் பிழைகளை அகற்றவோ அல்லது அத்தீர்ப்பிற்குப் பின்னதாக கருத்து மாற்றப்பட

வேண்டியிருந்தால் இதை மேற்கொள்ளவோ அனுமதிக்கப்பட்டன.

- உண்மைத் தகவல் சார் பிழைகளைச் சரி செய்ய, செலவுகளை மறுபரிசீலனை செய்ய அல்லது நடுவர் மன்றத் தீர்ப்பின் தகுதிகளை மதிப்பாய்வு செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை.




## எண்ணிம அணுகல் - அடிப்படை உரிமை




- அரசியலமைப்பின் 21வது சட்டப்பிரிவின் கீழ் உள்ள வாழும் உரிமையை எண்ணிம அணுகல் சூழல்களிலும் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- இதில் எண்ணிம அணுகல் என்பது ஓர் அடிப்படை உரிமையாகும் என்பதோடு கிராமப் புறங்கள் மற்றும் சமூகத்தின் விளிம்பு நிலைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் உட்பட அனைவருக்கும் எண்ணிம அணுகலை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- எண்ணிம அணுகல் இடைவெளியைத் தடுப்பது இனி கொள்கை சார் விருப்புரிமை சார்ந்த ஒரு விவகாரம் மட்டுமல்ல, மாறாக இனி கண்ணியம், தன்னாளுமை, பொது வாழ்வில் சமமான பங்கேற்பு ஆகியவற்றை உறுதி செய்வதற்கான அரசியலமைப்பு சார் கட்டாயமாக மாறியுள்ளது.

- அரசியலமைப்பின் 21 [கண்ணியமான வாழ்க்கைக்கான உரிமை], 14 [சமத்துவம்], 15 [பாகுபாட்டிற்கு எதிரான உரிமை], 38 [அரசு வழிகாட்டுதல் நெறிமுறைகள்] ஆகிய சரத்துகளின் கீழ் அரசுக்கு ஒரு கடமை உள்ளது.
- எண்ணிம உள்கட்டமைப்பு, அரசு தளங்கள், இயங்கலை கற்றல் தளங்கள் மற்றும் நிதியியல் தொழில்நுட்பம் ஆகியவை எளிதில் பாதிக்கப்படக் கூடிய மற்றும் விளிம்பு நிலையில் உள்ள அனைத்துப் பிரிவினரும் பொதுவாக எளிதில் அணுகக்கூடியதாகவும் பதிலளிக்கக் கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்யும் பொறுப்பை அவை மிக நன்கு உள்ளடக்கியிருக்க வேண்டும்.

## மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் தொடர்பான சமரசத்திற்குரியக் குற்ற விதிகள் 2025




- மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் ஆனது, சிறிய குற்றங்களை அபராதம் அல்லது தண்டனைகள் மூலம் தீர்க்க அனுமதிக்கும் வகையில் 2025 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் (சமரசத்திற்குரியக் குற்றங்கள்) குறித்த விதிகளை அறிவித்துள்ளது.
- இந்த முயற்சியானது 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டத்தின் கீழ் சிறியக் குற்றங்களின் தீர்வு முறையை நன்கு நெறிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விதிகள் ஆனது, குற்றவாளிகள் நீண்ட வழக்கு விசாரணை செயல்முறைகளைத் தவிர்த்து அபராதம் மூலம் வழக்குகளைத் தீர்க்க வழிவகை செய்கின்றன.
- இருப்பினும், முதல் முறை அத்தகையக் குற்றம் செய்யும் குற்றவாளிகள் மட்டுமே அபராதச் செயல்முறைக்குப் பரிசீலிக்கப்படுவார்கள் என்பதோடு மீண்டும் மீண்டும் குற்றங்களைச் செய்யும் குற்றவாளிகள் அபராதம் செலுத்துவதுடன் அவர்கள் சிறைத் தண்டனையையும் எதிர்கொள்ள வேண்டும்.
- மத்திய அரசானது, இதற்கென்று மூத்த நிலை அரசு அதிகாரியின் தரத்தில் ஒரு சமரச அதிகாரியை நியமிக்கும்.
- வழக்குத் தொடரலில் இருந்து விலக்குப் பெறுவது இனி தானாகவே வழங்கப்படாது.
- அதை வழங்கலாமா வேண்டாமா என்பது குறித்து முடிவு செய்யும் விருப்புரிமையை

சமரச அதிகாரி கொண்டிருப்பார்.

### NSAB மற்றும் அதன் செயல்பாடுகள்




- தேசியப் பாதுகாப்பு ஆலோசனை வாரியம் (NSAB) ஆனது 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் உருவாக்கப்பட்டது.
- இது அரசாங்கத்தினைச் சாராத வகையிலான பிரபல வெளியாட்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவாகும் என்பதோடு இது தேசியப் பாதுகாப்புச் சபையினால் பரிந்துரைக்கப் படும் தேசியப் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து தனது பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறது.
- NSAB வாரியத்தின் முக்கியச் செயல்பாடுகள் ஆனது, ஒரு நீண்டகாலப் பகுப்பாய்வை மேற்கொள்வதும் தேசியப் பாதுகாப்பு சபைக்கு (NSC) வேண்டிய தேசியப் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்த சில கண்ணோட்டங்களை வழங்குவதும், தேசியப் பாதுகாப்பு சபையினால் குறிப்பிடப்படும் பிரச்சினைகள் குறித்த நடவடிக்கைகள் / தீர்வுகள் மற்றும் கொள்கை விருப்பங்களைப் பரிந்துரைப்பதும் ஆகும்.
- இது தொழில்துறை, ஊடகம் மற்றும் குடிமைச் சமூகம் உள்ளிட்ட பல களங்களைச் சேர்ந்த மக்களை உள்ளடக்கியதாகும்.
- தேசியப் பாதுகாப்பு சபையின் செயலகம் (NSCS) ஆனது NSC, NSAB மற்றும் உத்தி சார்க் கொள்கைக் குழுவிற்கு உதவுகிறது.
- 2011 ஆம் ஆண்டில், NSAB வாரியத்தின் அப்போதையத் தலைவரான நரேஷ் சந்திரா என்பவர் தலைமையில் ஒரு பணிக் குழுவை அரசாங்கம் நியமித்தது.
- இது அந்தக் கட்டமைப்பை நன்கு மதிப்பாய்வு செய்து தேவைக்கேற்ப திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கான குழுவாகும்.
- 2012 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தக் குழுவின் அறிக்கையானது, தலைமைப் பணியாளர் குழுவின் நிரந்தரத் தலைவருக்கான பரிந்துரைகளை வழங்கியது.
- பின்னர் அது பாதுகாப்புப் படைகளின் தலைவர் பொறுப்பாக மாறியது.

## சர்வதேசச் செய்திகள்

### “நம்பிக்கையின் வெற்றி” - வியட்நாம்

- வியட்நாம் போர் முடிவடைந்ததன் 50வது ஆண்டு பெரும் நிறைவைக் கொண்டாடிய வியட்நாம் நாட்டு அரசானது அதனை “நம்பிக்கையின் வெற்றி- Victory of Faith” என்று

குறிப்பிட்டது.

- இந்த ஆண்டு நிறைவு விழாவானது 1975 ஆம் ஆண்டு ஏப்ரல் 30 ஆம் தேதியன்று அந்த நாட்டின் மறு ஒருங்கிணைப்பின் முதல் நடவடிக்கையினை நினைவு கூர்கிறது.
- இந்த நாளில்தான், கம்யூனிஸ்ட்களின் கீழான வடக்கு வியட்நாம், அமெரிக்க ஆதரவு பெற்ற தெற்கின் தலைநகரான சைகோனைக் கைப்பற்றி, ஹோ சி மின் நகரம் என மறுபெயரிட்டது.
- வியட்நாம் மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் 1995 ஆம் ஆண்டில் அரசுமுறை உறவுகளை இயல்பாக்கி, 2023 ஆம் ஆண்டில் அதனை மேலும் அதிகப்படுத்தின.




## அமெரிக்கா உக்ரைன் கனிம ஒப்பந்தம் 2025




- அமெரிக்கா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளும் போரினால் பாதிக்கப்பட்ட அந்த நாட்டின் சில இயற்கை வளங்களை அமெரிக்கா அணுக அனுமதிக்கும் வகையில் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- இந்த முக்கிய ஒப்பந்தத்தில் எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் பிற ஹைட்ரோ கார்பன்களுக்கான அணுகல் விதிமுறைகளும் அடங்கும்.

- இதற்கான நிதியானது 50-50 என்பதின் அடிப்படையில் பகிரப்படுகிறது என்பதோடு இது வாஷிங்டன் மற்றும் கீவ் இடையே சமமான கூட்டாண்மையைப் பிரதிபலிக்கிறது.

### உலகளாவிய ஊடகப் பேச்சுவார்த்தை 2025

- மும்பையில் நடைபெற்ற உலக ஒலி-ஒளி மற்றும் பொழுதுபோக்கு உச்சி மாநாட்டில் (WAVES) 13 அம்ச உலகளாவிய ஊடகப் பேச்சுவார்த்தைப் பிரகடனம் (WAVES பிரகடனம்) ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- இந்த நிகழ்வில் ரஷ்யா, ஜப்பான், ஐக்கியப் பேரரசு, எகிப்து, சவுதி அரேபியா மற்றும் பல நாடுகள் உட்பட 60க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்றன.
- பல்வேறு குரல்கள் மற்றும் உள்ளடக்கிய வகையிலான ஊடகச் சூழல் அமைப்புகளை ஊக்குவித்தல் & கலாச்சாரப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தல் மற்றும் பொது நலன் சார் உள்ளடக்கத்தினை ஆதரித்தல் ஆகியவை இந்த 13 அம்சங்களில் அடங்கும்.
- இது புதுமை, தரவுத் தனியுரிமைகள் மற்றும் எண்ணிமப் பாதுகாப்பு ஆகியவற்றை ஊக்குவிக்கிறது என்பதோடு நெறிமுறை சார்ந்த செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு மற்றும் உலகளாவிய உள்ளடக்க கூட்டாண்மைகளை ஆதரிக்கிறது.
- எண்ணிம ஊடகத்தின் ஜனநாயகத் தன்மை காரணமாக அவற்றின் பாத்திரங்கள் பெருகிய முறையில் ஒன்றுக்கொன்று பரிமாறக் கூடியதாக மாறி விட்ட, உள்ளடக்கப் படைப்பாளர்கள் மற்றும் நுகர்வோர் மத்தியில் இந்த நெறிமுறை விழிப்புணர்வின் அவசியத்தையும் இந்த அறிவிப்பு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.




# பொருளாதாரச் செய்திகள்

### சேவைத் துறை நிறுவனங்களின் வருடாந்திரக் கணக்கெடுப்பு (ASSSE) 2025

- சேவைத் துறை நிறுவனங்களின் வருடாந்திரக் கணக்கெடுப்பு (ASSSE) குறித்த முதல் சோதனை ஆய்வு ஆனது புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமைச்சகத்தால் நடத்தப் பட்டது.
- சுமார் 500 கோடி ரூபாய்க்கும் குறைவான உற்பத்தியைக் கொண்ட சேவைத் துறை நிறுவனங்கள் இந்தப் பிரிவில் உள்ள மொத்த வேலைவாய்ப்பில் சுமார் 63.03 சதவீதப் பங்கைக் கொண்டுள்ளன.
- சுமார் 500 கோடி ரூபாய் மற்றும் அதற்கு மேற்பட்ட உற்பத்தியைக் கொண்ட பெரிய நிறுவனங்கள் சொத்து உரிமை (62.77 சதவீதம்), நிகர நிலையான மூலதன உருவாக்கம்

(62.73 சதவீதம்), மொத்த மதிப்புக் கூட்டல் (69.47 சதவீதம்) மற்றும் மொத்த இழப்பீடு (63.17 சதவீதம்) ஆகியவற்றின் அடிப்படையில் முன்னிலை வகிக்கின்றன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் 10 பெரும் பொருளாதாரங்கள்

- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆனது, ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் மொத்த மதிப்பை நிர்ணயிப்பதற்கான ஒரு முக்கிய அளவீடாகும்.
- அமெரிக்கா 30.34 டிரில்லியன் டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் இந்தப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து சீனா (19.53 டிரில்லியன் டாலர்) மற்றும் ஜெர்மனி (4.92 டிரில்லியன் டாலர்) ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன.
- இந்தியா சுமார் 4.39 டிரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் 4வது இடத்தில் உள்ளது என்பதோடு மேலும் இது 6.2% சதவீத வளர்ச்சி வேகத்தில் தொடர்ந்து வளரும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தியாவானது, 2030 ஆம் ஆண்டிற்குள் ஜெர்மனியை விஞ்சி மூன்றாவது பெரியப் பொருளாதாரமாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| Rank | Country | GDP (USD) | 2025 Projected Real GDP (% Change) | GDP Per Capita (Current Prices) (USD) |
|---|---|---|---|---|
| 1 | USA | $30.34 trillion | 2.70% | 30.51 thousand |
| 2 | China | $19.53 trillion | 4.60% | 19.23 thousand |
| 3 | Germany | $4.92 trillion | 0.80% | 4.74 thousand |
| **4** | **India** | **$4.39 trillion** | **1.10%** | **4.19 thousand** |
| 5 | Japan | $4.27 trillion | 6.50% | 4.19 thousand |
| 6 | UK | $3.73 trillion | 1.60% | 3.84 thousand |
| 7 | France | $3.28 trillion | 0.80% | 3.21 thousand |
| 8 | Italy | $2.46 trillion | 0.70% | 2.42 thousand |
| 9 | Canada | $2.33 trillion | 2.00% | 2.23 thousand |
| 10 | Brazil | $2.31 trillion | 2.20% | 2.13 thousand |

## அதிக கடன் - மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் கொண்ட 10 நாடுகள் 2025

- சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) சமீபத்திய கணிப்புகள் ஆனது, உலகளாவிய அரசுகளின் கடன் ஆனது, 2020 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 98.9 சதவீதத்தினை எட்டிய COVID-19 பெருந்தொற்றுக் காலத்தின் அளவை விட அதிகமாக

இருக்கலாம் என்பதைக் குறிக்கிறது.

- உலகளாவிய அரசுகளின் கடன் ஆனது 2027 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 117 சதவீதத்தினை விட அதிகமாக இருக்கலாம்.
- உலகளாவியப் பொதுக் கடன் இந்தப் பத்தாண்டின் (2030) இறுதிக்குள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 100% (99.6%) பங்கினை எட்டக் கூடும்.
- சூடான் 252% என்ற உலகிலேயே அதிகக் கடன் மற்றும் GDP விகிதத்துடன் ஜப்பானை முந்தியது.
- வளர்ச்சியடைந்த மற்றும் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களில், ஜப்பான் 234.9% பங்குடன் மிக அதிக கடன் மற்றும் GDP விகிதத்தைக் கொண்டுள்ளது.
- உலகின் மிகப்பெரிய பொருளாதாரமான அமெரிக்கா, 2025 ஆம் ஆண்டில் 123% என்ற அதிக கடன் மற்றும் GDP விகிதத்துடன் உலகளவில் எட்டாவது இடத்தில் உள்ளது.
- பிரான்சு நாடானது, 116.3% என்ற பொதுக் கடன் விகிதத்துடன் 9வது இடத்தில் உள்ளது என்ற நிலையில் கனடா முதல் பத்து இடங்களில் ஒன்றாக இடம் பிடித்துள்ளது.
- சீனா, 96% பொதுக் கடன் விகிதத்துடன் 21வது இடத்தில் உள்ளது.
- இந்தியா 80% என்ற கடன் மற்றும் GDP விகிதத்துடன் உலகளவில் இதில் 31வது இடத்தில் உள்ளது.

| Rank | Country | General government gross debt (% of GDP) |
|---|---|---|
| 1 | Sudan | 252% |
| 2 | Japan | 234.9% |
| 3 | Singapore | 174.9% |
| 4 | Greece | 142.2% |
| 5 | Bahrain | 141.4% |
| 6 | Maldives | 140.8% |
| 7 | Italy | 137.3% |
| 8 | United States | 122.5% |
| 9 | France | 116.3% |
| 10 | Canada | 112.5% |

# மாநிலச் செய்திகள்

## ஜெய்கிர் கிராமம் இடமாற்றம்

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள பலமு புலிகள் சரணாலயத்திற்குள் (PTR) அமைந்து உள்ள ஜெய்கிர் கிராமம், அந்தச் சரணாலயத்தின் மைய (பாதுகாக்கப்பட்ட) பகுதிக்கு வெளியே முழுமையாக இடமாற்றம் செய்யப்பட்ட முதல் கிராமமாக மாறுகிறது.
- ஜெய்கிரின் புதிய இடம் ஆனது மையப் பகுதிக்கு வெளியே போல்போல் கிராமத்திற்கு அருகில் அமைய உள்ளது.
- பழைய ஜெய்கிர் புலிகளின் இரைகளை ஈர்க்கும் புல்வெளியாக மாறும்.

- இடமாற்றத்திற்காக மேலும் எட்டு கிராமங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- இந்தக் காப்பகம் ஆனது, தற்போது இந்த கிராமங்கள் அமைந்துள்ள 414.08 சதுர கிலோ மீட்டர் மையப் பரப்பளவுடன் 1129.93 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பை உள்ளடக்கியது.




## முக்கிய தினங்கள்

### உலகப் பத்திரிகைச் சுதந்திர தினம் 2025 - மே 03




- ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் தடைகளற்ற மற்றும் மிகச் சுதந்திரமான பத்திரிகையின் முக்கியத்துவத்தை இந்த நாள் எடுத்துரைக்கிறது.
- உண்மையைக் கண்டறிவதற்காக தங்கள் உயிரை இழந்த அல்லது அனைத்தையும் பணயம் வைத்த ஊடக வல்லுநர்களையும் இத்தினம் கௌரவிக்கிறது.
- 2024 ஆம் ஆண்டில், பணியின் போது 82 பேரும், 2023 ஆம் ஆண்டில் 74 பேரும் உயிர் இழந்தனர்.

❖ 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Reporting in the Brave New World – The Impact of Artificial Intelligence on Press Freedom and the Media" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களின் தற்காலிகப் பட்டியல் 2025




❖ கர்நாடக மாநிலத்தின் லக்குண்டியில் உள்ள நினைவுச் சின்னங்களின் குழுமம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள சில கோயில்கள், யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களின் தற்காலிகப் பட்டியலில் சேர்ப்பதற்காக என்று இறுதி செய்யப்படும் நிலையில் உள்ளன.

❖ அவை கி.பி 10 முதல் 12 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த கல்யாணச் சாளுக்கியர்கள் அல்லது மேற்கு சாளுக்கியர்களின் காலத்தில் கட்டப்பட்டவை.

❖ லக்குண்டி நினைவுச் சின்னக் குழுமத்தில் 11 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த காசி விஸ்வேஸ்வரர் கோயில், மணிகேஸ்வரர் கோயில், நன்னேஸ்வரர் கோயில், பிரம்ம ஜினாலயம் [லக்குண்டியில் உள்ள மிகப் பழமையான கோயில் மற்றும் கி.பி 1007 ஆம் ஆண்டினைச் சேர்ந்தது] மற்றும் முசுகினா பாவி ஆகியவை அடங்கும்.

❖ ஏற்கனவே தற்காலிகப் பட்டியலில் உள்ள பிற பாரம்பரியத் தளங்களில் தக்காண சுல்தானியத்தின் நினைவுச் சின்னங்கள் மற்றும் கோட்டைகள், ஸ்ரீரங்கப்பட்டின தீவு நகரத்தின் நினைவுச் சின்னங்கள், ஹைரே பெங்கல் பெருங்கற்காலத் தளம் மற்றும் பதாமி மற்றும் ஐஹோலே நினைவுச்சின்னக் குழுமம் ஆகியவை அடங்கும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★